RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt22s94

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# இல்லறக் கடமைகளே நல்லறம்

**ச. உமா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை-600030, தமிழ்நாடு, இந்தியா.

# Domestic Duties Are Virtuous

**S. Uma [a, *]**

[a] Department of Tamil, Pachaiyappa's College, Chennai-600030, Tamil Nadu, India

* Corresponding Author: sivahari_1972@yahoo.co.in

Received : 11-07-2021
Revised : 30-05-2022
Accepted : 11-06-2022
Published : 27-07-2022

Check for updates

**ABSTRACT**

In this world, it is necessary for man to follow certain morals in order to live well. The moral texts were composed with different objectives in mind: to discipline the individual and to correct and regularise the disorders of society. Imagination and emotion are not prioritised in these scriptures. They were only guides to teach the ethics that make a man live as a man. These teach ethics necessary for individual and public life. People spoke about the work that people have to do that is useful to the society they live in and to this world. As a result, morality is regarded as a way of life rather than a policy, theory, or religious belief. When we read these books thoroughly, we can distinguish between virtue and non-virtue. We can realise that charity is not a personal thing and it is a daily duty that we do in harmony with life. It is known that these books mention that virtue is to love others, virtue to speak in words, virtue to be grateful, virtue to do good; virtue to refrain from anger, virtue to help those who do not have it, virtue to strive relentlessly on the right path, virtue to be modest, virtue to follow the morals of an individual, etc. Apart from talking about the morals to be followed by the individual, the scriptures deal with the morals and duties to be followed by a person who wants to engage in public life. In this way, this article examines the virtue of a man in fulfilling his daily duties in his life through the work 'Arungalacheppu' of Jain literature, which is tamilized from the Kannada language.

**Keywords:** Arungalacheppu, Virtue, Life, Moral

## முன்னுரை

மனிதன் இவ்வுலகில் தோன்றிய காலம்தொட்டு செம்மையான வாழ்வு வாழ்வதற்குத் தீயவைகளை விலக்கி நல்லவைகளைப் பின்பற்றி வாழும் நெறிமுறை தேவையான ஒன்றாக இருந்து வந்துள்ளது. இத்தகு ஒழுக்க நெறி இவ்வுலகில் சிறந்த இன்பத்தை அளிப்பதோடு, பேரின்பவாழ்விற்கும் வழிகாட்டியாக அமைகிறது என்பது ஆன்றோர்களின் கருத்து. இந்நெறிமுறைகளைப் புரிந்துகொள்ள காலம் காலமாகத் தமிழ் இலக்கியங்கள் துணைபுரிந்து வந்திருக்கின்றன. அவ்வகையில் திருவள்ளுவருக்கு இணையாகக் கன்னட மண்ணில் பேசப்படும் சர்வக்ஞர் இயற்றிய 'திரிபதி'யின் தமிழாக்கமான 'சர்வக்ஞர் உரைப்பாவும்', சமண அறநூலான அருங்கலச்செப்பும் எடுத்துக்கூறும் எக்காலத்துக்கும் பொருந்தும் வாழ்வியல் அறங்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## அறம் - விளக்கம்

'அறு' என்னும் வினைச்சொல் அடியாகப் பிறந்ததே அறம். காலப்போக்கில் பல்வேறு பொருள்களை உணர்த்தும் பொருள் செறிவு வாய்ந்த சொல்லாகச் சிறப்புற்று விளங்கும் அறத்திற்கென குறிப்பிட்ட விளக்கம் கூறுவது எளிதன்று. எனினும் ஒருசில விளக்கங்களை இங்கு காண்போம்.

"மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே - முழுநிறை வடிவமே அறம் என்று கூறுவர். 'பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம்' என்ற ஆன்மீக விளக்கமும் இதற்குத் தரப்படுவதுண்டு" (Thirunavukarasu, 1977).

"தனி மனிதனின் வாழ்வும் பொதுவாழ்வும் சீராக இயங்கத் தனிமனிதன், அரசு போன்றவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கத்தின் அடிப்படையிலான நெறிமுறைகள் அல்லது கடமைகளே அறம்" என விளக்கமளிக்கிறது அகரமுதலி செந்தமிழ் சொற்களஞ்சியம்.

"அறத்தின் முதற்படி தத்தம் கடமைகளை ஒழுங்காகச் செய்வது என்பதே எல்லாச் சமயங்களும் ஒருமுகமாக ஒப்புக் கொள்ளுகின்ற ஒரு உண்மை" (Thirunavukarasu, 1977).

"கடமை என்பது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், தன்னைச் சார்ந்துள்ள உற்றார் உறவினருக்கும் தான் வாழும் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும், உலகிற்கும் பயன் கருதாது ஆற்ற வேண்டிய அரும்பணிகள்" (Thirunavukarasu, 1977).

மேற்கூறப்பட்ட விளக்கங்களிலிருந்து பண்டைய நாளிலிருந்தே மனிதர்கள் அறத்தை ஒரு கொள்கையாகவோ, கோட்பாடாகவோ, சமயமாகவோ கருதாது வாழ்க்கை நெறியாகவே பின்பற்றி வாழ்ந்து வருவதை அறியமுடிகின்றது. தனிமனிதனின் கடமைகள் வாழும் இடத்திற்கு ஏற்ப வேறுபட்டாலும் அடிப்படையான சில எந்நாட்டவருக்கும், எச்சமயத்தவருக்கும், எக்காலத்திற்கும் பொதுவானவையாகவே உள்ளன. அவற்றையே பெரும்பாலும் அனைத்து அறநூல்களும் எடுத்தியம்புகின்றன.

## அறத்தின் பயன்

மனிதன் தன் வாழ்வின் கடமைகளைச் சரிவரச் செய்தலினால் என்ன பயன் விளையும் என்ற வினாவிற்கு விடையளிப்பதுபோல

"அறத்தின் பயனால் ஆளுவர் மண்ணையே

அறம் வளர்த்து விண்புகினும் - ஆண்டும் எய்துப

அறத்தின் மேன்மை சர்வக்ஞ"

என அறத்தின் பயனால் இவ்வுலகில் உயர்ந்த நிலையை அடைய முடியும், செய்த நற்காரியங்களின் பயனால் ஊழ்வினை நீங்கப்பெற்று மேலுலகிலும் நன்மை கிட்டும் என சர்வக்ஞர் உரைப்பா குறிப்பிடுகின்றது (Iraiyadiyan, 2001).

"பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு நான்கும்

அறுத்தல் அறத்தின் பயன்"

என பிறப்பினால் உண்டாகும் துன்பங்களை அறுத்தலே அறத்தின் பயனென உரைக்கும் அருங்கலச்செப்பு இவ்வுலக வாழ்வில் நல்வினை, தீவினையை அறுத்தவர் எல்லையில் இன்பம் உணர்வு வலிகாட்சியுடை பேரின்ப நிலையான வீடுபேற்றை அடைவர் என எடுத்துரைக்கின்றது (Aravanan, 1978).

## ஈகையெனும் அறம்

கொடைக் குணம் உள்ளோர் மேன்மையுறுவர் என்பதைக் காட்ட

"குடைநிழலில் வலம் வருவாரைக் கண்டு

எடைபோடற்க என்பயன் செய்தார் இவரென?

கொடையின் முன்பயனது சர்வக்ஞ"

என ஈதலின் மேன்மையை எடுத்துரைக்கும் சர்வக்ஞர் உரைப்பா கொடைக்குணம் கொண்டோரை மூவகையாகப் பகுத்துக் காட்டுகின்றது (Iraiyadiyan, 2001).

"வேண்டுமுன் ஈவோன் உத்தமனே உலகில்

வேண்டியபின் ஈவோன் இடையினன் - கடையனே

வேண்டியும் ஈயான் சர்வக்ஞ." (Iraiyadiyan, 2001).

தம்மைப் போல் பிறரை நினைத்து உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றைக் கொடுத்து வாழும் எளிய வாழ்க்கை முறையே அறம் என்பதை

"உண்டி, மருந்தோடு, உறையுள், உபகரணம்

கொண்டு உய்த்தல் நான்காம் வதம்."

என வாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு, மருந்து, இருப்பிடம், பொருள்கள் இவற்றைக் கொடுத்து உதவுவதே சிறந்த அறம் என அருங்கலச் செப்பு உரைக்கின்றது (Aravanan, 1978). அங்ஙனம் கொடுத்து உதவப் பொருளிருந்தும் செய்யத் துணியாதவன் தம்மிடமுள்ள பொருளை இழந்து இழிநிலை அடைவான் என்பதை

"இருந்தும் ஈயாதானைக் காலனும் விடுவனோ?

இருந்தது ஒழியின் - முன்னர் இரந்தவர்பால்

வருவர் பணிபுரியவே சர்வக்ஞ." என விளக்குகின்றது (Iraiyadiyan, 2001).

தம் வாழ்வின் தேவைக்கு அதிகமாகப் பொருளைச் சேர்த்து வைப்போருக்கு

"இற்றைக்கு நாளைக்கென குவித்திடுதல் வேண்டா

இற்றைக்குக் கிடைத்ததைக் கொள்வாய்." (Iraiyadiyan, 2001).

என அறிவுறுத்தும் சர்வக்ஞர் உரைப்பா ஈட்டிய பொருளைத் தேவைப்படுவோருக்குக் கொடுத்து உதவுதலே அறம் என்பதை வலியுறுத்த

"யாருக்கும் அரைக்காசு நல்காத கருமி

யமன்வந்து கொல்லும் வேளையில் - ஈட்டியது

யாருக்காம் சொல்வாய் சர்வக்ஞ."

என யாக்கை நிலையாமையைச் சுட்டி ஈதலின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. நாட்டை ஆளும் அரசனும் கொடைக்குணமற்றவனாக இருந்தால் கேட்டினை அடைவான் என்பதைக் காட்டும் சர்வக்ஞர் உரைப்பா (Iraiyadiyan, 2001).

"வாய்க்குணவு கொடுக்காது வாய்மையை உரைக்காது

தாய்போல் கொடை நல்கா மன்னர்க்கு

நாய்க்குட்டியின் கேடுண்டாம் சர்வக்ஞ."

என்கின்றது (Iraiyadiyan, 2001).

## அன்பு செய்தலே அறம்

எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தவேண்டும் என்பதைத் தொன்று தொட்டு நம் தமிழ் இலக்கியங்கள் உணர்த்தி வந்திருக்கின்றன. அவ்வகையில் மனித உயிர்கள் மட்டுமல்லாது மரம், செடி, கொடி, விலங்குகள் போன்றவற்றிற்கும் துன்பம் இழைக்காது காப்பாற்ற வேண்டும் என்பதை செடி, கொடி, மரம் முதலானவற்றை வீணே வெட்டுவதும், கிள்ளுவதும், தரையை வீணே தோண்டுவதும் பயனில்லாத செயல்களௌன

"பயம்இல் மரம் குறைத்த லோடுஅகழ்தல் என்ப

பயம்இல் பமாதம் எனல்"

என பசுமைப் புரட்சிக்கு அடிகோலுகின்றது அருங்கலச் செப்பு (Aravanan, 1978).

'விலங்குகளின் உறுப்புகளை அறுத்தல், சாட்டை முதலானவற்றால் அவற்றை அடித்தல், உணவு இடாமல் ஓரிடத்தில் நெருங்க அடைத்து வைத்தல், கயிறு முதலானவற்றால் கட்டி வைத்தல், மிகுந்த சுமையை ஏற்றுதல் என்ற இவ்வைந்தும் குற்றமுள்ள செயல்கள்' என உரைக்கின்றது (Aravanan, 1978).

'கன்று, காளை, பணியாள் என்பனவற்றைக் குறைந்த விலைக்கு வாங்கலாம் என்றும், அதற்கு இணங்க வைக்க வழி உண்டு என்றும் கூறுதல் பாப உபதேசங்களௌனக் காட்டுகின்றது' (Aravanan, 1978).

## நல்லனவற்றை நாடுதலே அறம்

இனிய சொற்களைப் பேசுதல், பசித்தவருக்கு உணவிடுதல் போன்ற எளிய செயல்களை நம் தினசரி வாழ்வில் கடைப்பிடித்து வந்தால் அதுவே மிகச் சிறந்த அறம். தமக்கும் பிறருக்கும் இனிமை தரும் சொல்லையும், செயலையுமே மனதில் சிந்திக்க வேண்டி வலியுறுத்துகின்றது அருங்கலச் செப்பு.

"தனக்கும் பிறர்க்கும் உறுதிசொற் செய்கை

மனத்தினில் சிந்திக்கற் பாற்று" (Aravanan, 1978).

"நன்மை தரும் சொற்களைப் பெரியோரிடம் தொடர்ந்து கேட்டுப் பயன்பெற வேண்டும் 'அகில் சுட்டாலும் கறுத்தாலும் மணக்கும்' அதுபோல எத்தகு இடையூறு நேரினும் உயர்ந்தோர் தம் குணத்திலிருந்து மாறுபடாது நற்சொற்களையே கூறுவர்" (Iraiyadiyan, 2001). அப்படிச் செய்தால் சிறுதுளிகள் சேர்ந்து பெருவெள்ளம் ஆவதுபோல் நல்லறிவுடையோரின் மொழிகளால் மனம் தெளிந்து தெய்வநிலை அடையும் என்பதை

"சேருஞ்சிறு துளிகளிங்கு பெருவெள்ளம் ஆவதுபோல்

பேறறிவர் மொழிகள் பல செவியுறவே செம்மையின்

வாலறிவன் ஆகுவரே சர்வக்ஞ."

எனக் காட்டுகின்றது (Iraiyadiyan, 2001).

அறத்தின் மேன்மையை இரத்தினச் சுருக்கமாக

"தேவனும் நாய் ஆகும் தீக்காட்சியால், நாயும்

தேவனாம் நற்காட்சியால்"

என அருங்கலச் செப்பு சுட்டுவதிலிருந்து நல்லறம் பேண மனிதன் தீய எண்ணங்கள், தீய செயல்கள், பிறரைப் புண்படுத்தும் தீயசொற்கள் இவற்றைக் கண்டறிந்து விலக்குதல் அவசியம் என்பது அறியப்படுகிறது (Aravanan, 1978).

## அறிந்துணர்தலெனும் அறம்

செய்த தவறுகளால் விளைந்த இழிவையும் பழி பாவங்களையும் மறவாது நினைத்து வருந்தவேண்டும், திருந்த வேண்டும். என்பதை

“இறந்ததன தீமைக்கு இழித்தும் பழித்தும்

மறந்தொழியா மீட்டல் தலை.” (Aravanan, 1978). என அருங்கலச்செப்பு குறிப்பிடுகின்றது.

“அறிந்தாற்றிய பிழையும் மறந்திடுமோ?

மறப்பினும் நிற்கும் நினைவில்- குற்ற

மறிந்து பாராய் சர்வக்ஞ.” என்றும்

“அறியாமற்செய்த பிழைதனை அறிந்துணர்தல் நன்று

அறிந்தேசெய்து மறப்பது - தன்னிரு நயனங்களை

அரிந்துகொண்டன்ன சர்வக்ஞ.” என்றும்

அறிந்தோ அறியாமலோ செய்த பிழைகளை நினைத்து வருந்தி அவை மீண்டும் நிகழாவண்ணம் தம் செயல்களில் மாற்றத்தைக் கடைபிடித்துத் திருந்துதலின் அவசியத்தை இவ்விலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன (Iraiyadiyan, 2001).

“கண்டோரை நிந்திப்பார் கண்டபோது கள்ளுண்பார்

புன்மொழிக்கும் நாணமடையார் காணின் இவரை

மண்ணில் ஒதுங்கிவிடு சர்வக்ஞ.”

எனத் தெரிந்தே தவறு செய்யும் போதைக்கு அடிமையானவர்களை இகழ்ந்து புறந்தள்ளச் சொல்லுகின்றது (Iraiyadiyan, 2001).

“மயக்கம் கொலை அஞ்சிக் கள்ளும் மதுவும்

துயக்கில் துறக்கப் படும்.”

என போதை தரும் கள், மது போன்றவற்றைத் தயக்கமின்றி விலக்கச்சொல்லி அருங்கலச்செப்பு அறிவுறுத்துகின்றது (Aravanan, 1978). இத் தீய பழக்கம் அறிவை மயக்குவதோடு நில்லாது கொலை செய்யும் அளவிற்கு மனிதனைத் தூண்டுமெனவும் அச்சுறுத்துகின்றது.

## அறமல்லாதவை

செருக்கை விளைவிக்கும் எண்வகை மதங்களாக

“பிறப்பு, குலம், வலி, செல்வம், வனப்பு

சிறப்பு, தவம், உணர்வோடு எட்டு.” (Aravanan, 1978).

எனக் குறிப்பிடும் அருங்கலச் செப்பு இந்த எண்வகை மதங்களால் பெருமிதம் கொண்டு பிறரை இகழ்ந்தால் அறம் அழியும் என்பதை

“இவற்றால் பெரியேம்யாம் என்றே, எழுந்தே

இகழ்க்கில் இறக்கும் அறம்.” (Aravanan, 1978). என்கின்றது.

“கண்ணிலான் காணான் தன்னெதிர் வருவாரை

கண்முன் கண்டும் வாவென்றழையா செருக்குடையார்

கேண்மைத் தவிர் சர்வக்ஞ.”

எனச் செருக்கினால் வரவேற்று உபசரிக்கும் நற்பண்பை இழந்தவனின் தொடர்பை சர்வக்ஞர் உரைப்பா விலக்கச் சொல்லுகின்றது (Iraiyadiyan, 2001).

“திருந்தாதவர் தரும் பொருள் உதவியையும், தீயவருடன் பழகும் தோழமையையும் மனத்தாலும் பொருந்தாமை வேண்டும்” (Aravanan, 1978). என்பதை

“திருந்தார் பொருள்வரவும், தீயார் தொடர்பும்

பொருந்தாமை சிந்திக்கற்பாற்று.”

எனக் காட்டி (Aravanan, 1978).

“மற்றவர் தமக்கு இழைத்த துன்பம் பொறுக்காது அவர் சாக மாட்டாரா என எண்ணுவது, அவர் சீரழிந்து கெட்டொழிய வேண்டும் என நினைப்பது போன்றவற்றைக் கனவிலும் எண்ணாமை வேண்டும்” (Aravanan, 1978). என்பதை

“பிறர்கண் வருத்தமும், சாக்காடும், கேடும்

மறந்தும் நினையாமை நன்று.”

எனக் குறிப்பிடுகின்றது (Aravanan, 1978).

தேவைக்கு அதிகமான பொருளைப் பிறர் உழைப்பால் ஈட்டாது பேராசையை ஒழித்து வாழ

“பொருள் வரைந்து ஆசை சுருக்கி ஏவாமை

இருள் தீர்ந்தார்க்கு ஐந்தாம் வதம்.” (Aravanan, 1978). என அருங்கலச்செப்பு வழி காட்டுகின்றது. இதனையே

“அழிக்கும் வாய்மையை, கெடுக்கும் அறத்தை,

ஒழிக்கும் நல்லுடலை, - பேராசையின் எண்ணம்

இழிவென ஒதுக்கிடுவாய் சர்வக்ஞ.”

என சர்வக்ஞர் உரைப்பா எடுத்துரைக்கின்றது (Iraiyadiyan, 2001).

மனதைப் புண்படுத்தும் தீய சொற்கள் கொடிய விடத்திற்குச் சமம் என்பதை

“அரவுப் பல்லும் கத்திமுனையும் விடமாம்

இரக்கமிலார் சொல்லும் விடமாம் - கீழோர்

இருப்பதுவே விடமாம் சர்வக்ஞ.” (Iraiyadiyan, 2001). என சர்வக்ஞர் உரைப்பா குறிப்பிடுகின்றது. சேர்ந்தாரைக் கொல்லும் சினத்தைத் தவிர்ப்பதன் அவசியத்தை

“சினமே எமனாம் பாவமே எமனாம்

சினமும் பாவமும் களையின் - எமனும்

தனதடிமை காண்பாய் சர்வக்ஞ.” (Iraiyadiyan, 2001).

எனக் காட்டி, இன்னல் இன்பம் இரண்டையும் ஒன்றெனக் கருதி சினம் தவிர்த்து நடுவுநிலைமையுடன் வாழ்வோருக்கு வினையால் வரும் துன்பமில்லை என்பதை

“சினமே பாவத்தின் உறைவிடம் என்பர்

இன்ன லின்பம் ஒன்றெனக் கொண்டோர்க்கு

முன்பின் பாவமேது சர்வக்ஞ.”

என மனதை ஒருநிலைப்படுத்த சர்வக்ஞர் உரைப்பா வழிகாட்டுகின்றது (Iraiyadiyan, 2001).

 DOI: 10.34256/irjt22s94

## முடிவுரை

இறையடியான் அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்ட சர்வக்ஞர் உரைப்பாவும், ஆசிரியர் பெயர் தெரியா அருங்கலச் செப்பு என்னும் சமண அற நூலும் நமக்கு நல்லறத்தையும், அறமல்லாதவையையும் பகுத்துக்காட்டி நாம் கடைப்பிடிக்க தகுந்த ஒழுக்க நெறிகளால் விளையும் பயன்களையும் எடுத்துக்காட்டியுள்ளன. இவற்றிலிருந்து நம் வாழ்வில் அறச்செயல் என்பது தனிப்பட்ட ஒரு விடயமல்ல என்பதும் வாழ்வோடு இயைந்து நாம் அன்றாடம் செய்யும் கடமைகளை நன்முறையில் சரிவரச் செய்தலேயாம் என்பதும் உணரப்படுகின்றது. அறமும் இல்வாழ்க்கையும் ஒன்றோடொன்று இயைந்ததே வெவ்வேறல்ல என்பதால் இல்வாழ்வின் அன்றாடக் கடமைகளே அறம் என்பதே ஆய்வின் முடிவாகக் கொள்ளப்படுகிறது.

## References

Aravanan, K.P., (1978) Arungala Cheppu Mollamum Uraiyum, Jain Youth Forum, Chennai, India.

Iraiyadiyan, (2001) Sarvajnara Therappa, International Institute of Tamil Studies, Chennai, India.

Thirunavukarasu, K.T., (1977) Thirukkural Neethi Ilakkiyam, Madras University, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License